**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண். 43/2021</u>**

<u>Connected with 44/2021</u>

2023- ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12– ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW2 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னு | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | பெருமாள் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | நன்னை | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 55/2023 |

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

1) வாதிகளாகிய சின்னபொன்னு மற்றும் லெட்சுமி எனக்கு என்ன உறவு முறை என்றால் இருவரும் எனக்கு அத்தை மருமகள்கள் ஆவார்கள். பெரியசாமி எனது சித்தப்பா மகன் ஆவார் . வாதிகள் அழைத்ததின் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து அரசு புறம்போக்கு சொத்து என்றால் சரிதான். வாதி சொன்ன விபரங்களை டைப் அடித்ததில் தான் நான் கையெழுத்து செய்துக் கொடுத்தேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்து வாதிக்கு தான் தெரியும் என்றும் , எனக்கு அதுபற்றி தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

2) வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் வண்டி பாதைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நான் சொல்வது போல் வாதிகள் வண்டி பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது சொத்திற்கு கீழ்புறத்தில் தாவா சொத்து உள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . நான் எனது வாக்குமூலத்தில் எனது சொத்திற்கு கீழ்புறத்தில் உள்ள தாவா சொத்தை பாதையாக பயன்படுத்தி சென்று வருகிறோம் என்றால் சரிதான்.

3) வாதிகள் யாரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது . தாவா சொத்தை தனிப்பட்ட நபர்கள் யாரும் விற்கவோ, வாங்கவோ முடியாது என்றால் சரிதான் . அரசு நினைத்தால் மட்டுமே அதை யாருக்காவது ஒப்படைக்க முடியும் என்றால் சரிதான் . வாதிகள் அரசிடம் தாவா சொத்தை அனுபவ ஒப்படைப்பு செய்ய கோரி மனு தாக்கல் செய்த விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . தாவா சொத்தை பார்வையிட வருவாய் துறையினர் வந்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) வாதிகளுக்கு தாவா சொத்தை அனுபவ ஒப்படைப்பு செய்தால் பிரதிவாதிகளுக்கு வேறு பாதை இல்லாமல் போய்விடும் என்பதால் தான் அரசு தாவா இடத்தை வாதிகளுக்கு ஒப்படைப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் எந்த வழக்குகளும் நிலுவையில் இல்லை. நாங்கள் தற்போது வரை பேசிக் கொண்டு தான் இருக்கிறோம் . எனக்கும், பிரதிவாதிக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்று சொன்னால் சரியல்ல . எனக்கும், பிரதிவாதிக்கும் சொத்து பிரச்சனை உள்ளதால் தான் நான் தற்போது வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5) நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 5 அடி அகலமுள்ள பாதையை அனுபவித்து வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் ஒரு பகுதியான 5 அடி பாதையை தான் நான் பயன்படுத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல . நான் சொல்வது போல் 5 அடி பாதை எனது தனிப்பட்ட சொத்து அல்ல என்றாலும் அதுவும் அரசுக்கு சொந்தமானது தான் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் உரிமையே இல்லாத நபர்களிடமிருந்து கிரயம் பெற்றது செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

6) வாதிகள் வழக்குரையில் சொல்லாத விபரங்களை எல்லாம் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உள்ள பாதையை தவிர வேறு பாதை எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை தான் நான் மற்றும் பிரதிவாதிகள் பயன்படுத்தி வருகிறோம் என்றாலும் தற்போது

DMunicipal Kumar

வழக்கிற்காக பாதையாக பயன்படுத்தவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் அனுபவ ஒப்படைப்பு கேட்டு அது மறுக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு பின்னிட்டு தான் இந்த வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7) எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதி தாவா பாதையை தான் தற்போது வரை பயன்படுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தற்போது வரை அந்த பாதையை தான் பயன்படுத்தி வருகிறார் என்றாலும், நான் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதி, வாதிகள் மீது வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கும் சேர்த்து தான் சங்கதிகள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

8) எனக்கு தாவா வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாமல் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . வாதிகள் போட்ட வழக்கு தள்ளுபடி ஆக வேண்டுமென்றாலும், பிரதிவாதி போட்ட வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMunCum Court, Kunnam